## 64. உம்மிலே மகிழ்கிறேன்

பல்லவி

உம்மிலே மகிழ்கிறேன்
உமக்குள்ளே வாழ்கிறேன்

அனுபல்லவி

*நீரே தரிசனத்தை என்னில் வைத்தீர்*
*நீரே உம் கனவை எனக்குள் கண்டீர்*

சரணங்கள்

1. காலங்கள் கடந்துபோனாலும்
நீர் வைத்த தரிசனம் மாறாதே
குறித்த காலத்தின் நாட்களில்
உம் தரிசனம் நிறைவேறுமே

- உம்மிலே

2. சூழ்நிலைகள் எல்லாம் மாறினாலும்
மனிதர் எல்லாம் மறந்தாலும்
தரிசனத்தை வைத்தவரோ
என்றென்றும் மாறாதவர்

- உம்மிலே

3. நீர் என்மேல் வைத்த தரிசனத்தை
பிசாசின் தந்திரங்கள் அழிப்பதில்லை
மனிதர்கள் தீய ஆலோசனை
ஒன்றும் வாய்க்காதே

- உம்மிலே